


# இந்த, பாடத்திலே ,உஷா 3 - வே கார்டிங் ஃபுட்-ஐ யூஸ் பண்றது பத்தி தெரிஞ்சுக்கப்போறீங்க.








பேருக்கு ஏத்த மாதிரி, இந்த ஃபுட்-னாலே,மூணு கயிறுகளை ஒரே சமயத்திலே, தைக்க முடியும்.
நேர்க்கோடாகவும்,தைக்கலாம்,அல்லது, நுட்பமான டிசைன்-களுக்கு ஏத்தமாதிரியும் தைக்கலாம்.

முதல்லே, இந்த பாடத்துக்கு வேண்டியதை எல்லாம் எடுத்துக்கலாம்.ஆமாம், உங்களுக்குத்தேவையானது,-- உஷா ஜெனோம் கார்டிங் ஃபுட், கயிறுகள், ஒரே கலரா இருக்கலாம், அல்லது வெவ்வேற கலரா இருக்கலாம். தைக்கற நூல்,- இதுவும் ஒரே கலரா இருக்கலாம்,அல்லது, கான்ட்ராஸ்ட்-ஆ, இருக்கணும்-னு நீங்க நினைச்சா, வேற கலரை யூஸ் பண்ணுங்க.கடைசியா, நீங்க முதல் முறையா கார்டிங் செய்ய பயன்படுத்தப்போற துணி.

துணியோட நீளத்தைப்போல நாலு மடங்கு நீளத்திலே கயிற்றை அளந்து

கட் பண்ணிக்கங்க.மற்ற ரெண்டு கயிறுகளையும், இதே மாதிரி அளந்து எடுத்துக்கங்க.நீங்க, இங்கே பார்க்கலாம்,இந்த பாடத்துக்காக, நாங்க ரெண்டு, மஞ்சள் நிற கயிறுகளையும் ஒரு பச்சைநிற கயிற்றையும் யூஸ் பண்றோம்.

ஆனா, 3- வே கார்டிங் ஃபுட்-ஐ யூஸ் பண்ணும் போது, மூணு கயிறுகளை பயன்படுத்தணும்-னு அவசியம் இல்லை.உங்களுக்குத்தேவையான எஃபெக்ட் கிடைக்கறதுக்கு,1,-அல்லது,2-, அல்லது 3- கயிறுகளை ஒரே சமயத்திலே யூஸ் பண்ணலாம்.
லீவர் -ஐ பயன்படுத்தி, நார்மல் ப்ரெஸ்ஸர்















ஃபுட் -ஐ எடுத்துட்டு, 3 வே கார்டிங் ஃபுட்-ஐ, அட்டாச் பண்ணுங்க.
நான் எப்படி, முதல் கயிற்றை க்ளிப்-க்கு அடியிலே கொண்டுவந்து,முதல் க்ரூவ்-க்கு கீழே நுழைக்கிறேன்னு கவனியுங்க. க்ரூவ்-க்குள்ளே கயிறு வர்ரதுக்கு லேசா பிடிச்சு இழுக்கணும்.ரெண்டாவது, மூணாவது கயிறுகளை, ரெண்டாவது, மூணாவது, க்ரூவ்-லே, வைக்கணும். ஃபுட் -க்கு பின்னாலே மூணு கயிறுகளும், ஒரே அளவிலே,இருக்கற மாதிரி பார்த்துக்கணும்.. அதாவது ரெண்டு அங்குல நீளம், இருக்கலாம், இந்த மாதிரி.
இந்த ஃபுட், இப்போ, யூஸ் பண்ண தயாரா இருக்கு, ஆனா, நீங்க தைக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னே,உங்க மெஷினை, செட் பண்ணிக்கங்க. பேட்டர்ன் செலக்டர் டயல்-லே, D ஸ்டிச்-ஐ, செலக்ட் பண்ணுங்க, ஸ்டிச் லெந்த், 2-ஐ, செலக்ட் பண்ணுங்க
அடுத்து,துணியை, கார்டிங் ஃபுட்-க்கு கீழே வெச்சு, ஃபுட்-ஐ, கீழே இறக்குங்க.எப்போ தைக்கப்போறோம்-னு ஆர்வமா இருக்கா ?இப்போ, தைக்க ஆரம்பிக்கறதுக்கான நேரம் வந்தாச்சு. இன்னொரு முனைக்கு வந்துட்டீங்கன்னா, கயிறுகளை கொஞ்சம் நீளம் விட்டு, கட் பண்ணிடுங்க.
இது, பேசிக் கார்டிங் .உங்க கார்டிங் பேட்டர்ன்ஸ் இன்னும் எடுப்பா தெரியறதுக்கு, நீங்க பலவிதமான தையல்களையும், பயன்படுத்திப்பார்க்கலாம்.இன்னொண்ணை, இப்போ செய்யலாம்.
டயல் -ஐ,ஸ்ட்ரெட்ச் ஸ்டிச் , அல்லது, SS மார்க்கிங்-க்கு திருப்புங்க. ஸ்டிச் D-ஐ, செலக்ட் பண்ணுங்க.
துணியை, ஃபுட்- கீழே வெச்சு,முன்னே மாதிரியே, தைக்க ஆரம்பியுங்க.ஆனா, இது, வேற தையல் . தைச்சு முடிச்ச பிறகு, அதிகப்படியா இருக்கிற கயிறுகளை கட் பண்ணிடுங்க.
கைக்குட்டையிலே இருந்து, குஷன் கவர்ஸ், கார்மெண்ட்ஸ்- வரைக்கும்,பயன்படுத்தற மாதிரி, கார்டிங்,ஒரு டிசைன் எலிமென்ட் -ஆ, 3-D எஃபெக்ட் கொடுக்குது.அது, டெக்சர்ட் எஃபெக்ட் கொடுக்குது. சரியா பயன்படுத்தினா,அது ரொம்ப பிரமாதமா இருக்கும்.உங்களுக்கு இந்த பாடம் பிடிச்சு இருக்கும்-னு நினைக்கறோம்.இப்போ, உங்க கிட்டே இருக்கிற பளெயின் துணிகளை எடுத்து, அலங்காரம் செய்ய ஆரம்பியுங்க.உங்க ஆடைகள் கலர் கலரா இல்லாம, ஒரே கலர்-லே இருக்கறதை விரும்புவீங்கன்னா,அதே கலர் கயிறுகளாலே, எடுப்பா காட்டறதை விட ,வேற எதுவும்,சிறப்பா இருக்காது. அதனுடைய நேர்த்தியான அழகு இன்னும் அதிகமாகும். பகட்டா உடுத்தணும்-னு நினைக்கறவங்க, அழகான நிறங்களையும் பளிச்சுன்னு இருக்கிற காண்ட்ராஸ்ட்-ஐயும் தேர்ந்தெடுங்க. அது உங்க தோற்றத்தை எடுத்துக்காட்டும்.
வேடிக்கையா, சந்தோஷமா கார்டிங் பண்ணுங்க.